# தமிழினி தமிழ் உரைகள்

## 10-ஆம் வகுப்பு - காலாண்டு தேர்வு - மாதிரி வினாதாள் -1

**பாடம்: தமிழ்** **பகுதி-1 (மதிப்பெண்கள்: 15)** **மொத்த மதிப்பெண்: 100**
**நேரம்: 3.00**

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15**

**1. 1554-இல் ______ என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ் மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது.**
அ. Mahabharadham ஆ. Cardilla இ. A Bond of love ஈ. The world of trees

**2. காசிக்காண்டம் என்பது ______**
அ. காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ. காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
இ. காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர் ஈ. காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

**3. திருவிளையாடற்புராணத்தில் உள்ள இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் ______ஆவது படலம் ஆகும்.**
அ. 36 ஆ. 103 இ. 56 ஈ. 30

**4. வயலில் விதைத்து விட்டு வந்த நெல்லை பிறகு அரிந்து உணவு சமைத்த திறனைப் பற்றிக் கூறும் நூல் ______**
அ. நற்றினை ஆ. பெரியபுராணம் இ. புறநானூறு ஈ. பரணி

**5. "உனதருளே பார்பபன் அடியேனே" - யார் யாரிடம் கூறியது?**
அ. குலசேகராழ்வார் இறைவனிடம் ஆ. இறைவன் குலசேகராழ்வாரிடம்
இ. மருத்துவரிடம் நோயாளி ஈ. நோயாளியிடம் மருத்துவர்

**6. கலைஞாயிறு என்று அழைக்கப்படுபவர் யார்?**
அ. பாவாணர் ஆ. ந. முத்துசாமி இ. செய்குதம்பி பாவலர் ஈ. கம்பர்

**7. மலர்கள் தலையில் நழுவும். எப்போது?**
அ. அள்ளி முகர்ந்தால் ஆ. தளரப் பிணைத்தால் இ. காம்பு முறிந்தால் ஈ. இறுக்கி முடிச்சிட்டால்

**8. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?**
அ. துலா ஆ. இலா இ. சீலா ஈ. குலா

**9. குறிப்பு விடைகளாக கூறப்படுபவை ______**
அ. 8 ஆ.6 இ. 5 ஈ. 3

**10. மருத நிலத்திற்குரிய சிறும்பொழுது ______**
அ. யாமம் ஆ. மாலை இ. வைகறை ஈ. எற்பாடு

**11. உரிமை உடைத்திவ் வுலகு - இக்குறளடிக்குப் பொருத்தமான வாய்பாடு எது?**
அ. புளிமா, கருவிளம், நேர்பு ஆ. கூவிளம், தேமாங்காய், காசு
இ. கருவிளம், கருவிளம், பிறப்பு ஈ. புளிமா, புளிமா, பிறப்பு

**பாடலை படித்து பின்வரும் வினாக்களுக்கு (12. 13. 14. 15) விடை தருக.**

*"ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?*
*வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?*
*தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?*
*"ஏழைமை வேடன் இறந்திலன்" என்று எனை ஏசாரோ?*

**12. இப்பாடலின் ஆசிரியர் யார்?**
அ. சேக்கிழார் ஆ. கம்பர் இ. பரஞ்சோதி முனிவர் ஈ. குலசேகராழ்வார்

**13. நெடுந்திரை - இலக்கணக் குறிப்பு எழுதுக.**
அ. பண்புத்தொகை ஆ. வினைத்தொகை இ. உவமைத்தொகை ஈ. உம்மைத்தொகை

**14. இப்பாடலில் "வேடன்" என்ற சொல் யாரைக் குறிக்கும்?**
அ. இராமன் ஆ. இலட்சுமணன் இ. குகன் ஈ. பாரதியார்

**15. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகையை எழுதுக?**
அ. சொல்லிய-சொல் ஆ. நெடுந்திரை-நெடும்படை இ. தோழமை-ஏழைமை ஈ. ஆளோ-அன்றோ

**பகுதி -II (மதிப்பெண்கள்: 18)**
**பிரிவு-1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4 x 2 = 8**
**(வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

**16. விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ. நெய்தல் நிலத்தவர் பாணர்களை அழைத்துக் குழல் மீன் கறியும், தினைச் சோற்றையும் கொடுத்தனர்.
ஆ. கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால் கொடைக்கு அங்கே இடமில்லை.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**17. காற்று வீசும் திசையைக் கொண்டு தமிழர்கள் காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?**
**18. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக?**
**19. வழுவமைதி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
**20. தமிழகத்தில் கரகாட்டம் எங்கெங்கு நடைபெறுகிறது?**
**21. வினை என முடியும் குறளை எழுதுக.**

**பிரிவு-2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10**

**22. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**
அ. அம்மா என்னை அடித்தார். நான் அழுதேன். (கலவை தொடராக மாற்றுக)
ஆ. வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்தினார். நான் நன்றாக கவனித்தேன். நல்ல மதிப்பெண் பெற்றேன். (தொடர் சொற்றொடராக மாற்றுக)

**23. பிழைகளை திருத்தி எழுதுக.**
**வள்லுவன் தன்னை உலகினுக்கே - தந்து வாண்புகழ் கொண்ட தமில்நாடு - நெஞ்சை அள்ளும் சிலப்பதி காறமென்ரோர் - மணி யாறம் படைத்த தமில்நாடு.**

**24. கலைச்சொல் தருக.**
அ. Consonant - ஆ. Thesis -

**25. பகுபத உறுப்பிலக்கணம் காண்க:** *போனான்*

**26. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**
அ. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
ஆ. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

**27. இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**
அ. வனம் - வானம் ஆ. கொள் - கோள்

**28. அடிக்கோடிட்ட சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.**
அ. வடித்த கஞ்சியில் சீலையை அலசினேன்.
ஆ. மேடையில் நன்றாகப் பேசினான்.

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு-1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**

29. காலமாற்றமானது தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்களை எழுதுக?
30. செயற்கை நுண்ணறிவு நமக்கு எப்படி அறிமுகமாகிறது என்பதை விவரி?
31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**
**(வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32. "மாளாத மாதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவகை சுட்டும் செய்தியை விளக்குக?
33. இரக்ககுணம் என்பது அனைவருக்கும் இருக்க வேண்டிய ஒன்று என்பதை வள்ளுவர் வழி விளக்குக?
34. அ. தென்னன் மகளே!.... எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடலை எழுதுக. (அல்லது)
ஆ. புண்ணியப் புலவீர்.... எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணம் பாடலை எழுதுக.

**பிரிவு-3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6**

35. ஐந்திணைக்குரிய பெரும்பொழுது, சிறும்பொழுதை விவரித்து எழுதுக?
36. அலகிட்டு வாய்பாடு காண்க.
செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரிய தில்.
37. தீவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக?

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25**

38. அ. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக?
(அல்லது)
ஆ. கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து எழுதுக?



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

39. அ. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக?

(அல்லது)

ஆ. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**41. மொழிபெயர்க்க.**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices.

42. கஜா புயல் இலங்கைக்கு வடமேற்கே 200 கீ.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்துக.

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 x 8 = 24**

**43. அ. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக?**

(அல்லது)

**ஆ. நீங்கள் அறிந்த நிகழ்கலையில் ஏதேனும் ஐந்தினைப் பற்றி விவரித்து எழுதுக?**

**44. அ. கோபல்லபுரத்து மக்கள் கதையின் கருப்பொருளைக் குன்றாமல் எழுதுக?**

(அல்லது)

**ஆ. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக?**

**45. அ. 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பைக் கொண்டு கட்டுரை எழுதுக?**

(அல்லது)

**ஆ. பள்ளியை நாம் எவ்வாறு தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பது பற்றி கட்டுரை எழுதுக.**

**என்னால் முடியும். இந்த வாசகத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். – ஏ பி ஜே அப்துல் கலாம்**



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593